# செய்தியாளர்கள் சந்திப்பு – 22.11.2006

முதல்வர் கலைஞர் அவர்களை இன்று (22.11.2006) தலைமைச்செயலகத்தில் செய்தியாளர்கள் சந்தித்தனர். அப்போது முதல்வர் கலைஞர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது:–

சென்னை உயர்நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும், இதுவரையில் ஆங்கில மொழியே வழக்கு மொழியாக இருந்து வருகிறது. அரசியல் சாசனச் சட்டப் பிரிவு 348ல் உயர்நீதிமன்றத்திலும் மற்றும் உச்சநீதிமன்றத்திலும் ஆங்கில மொழியிலேயே அனைத்து நடவடிக்கைகளும் நடத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதன்படி ஆங்கில மொழியே சென்னை உயர்நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்திலும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. எனினும், அரசியல் சாசனச் சட்டப் பிரிவு 348, உட்பிரிவு(2)ல் மாநில மொழியில் உயர்நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் நடைபெற வேண்டுமென்று குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று மாநில அரசு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்டுள்ள அரசியல் சாசனச் சட்டப் பிரிவைப் பயன்படுத்தி சென்னை உயர்நீதிமன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் உள்ள வழக்கு மொழியாக தாய்மொழி தமிழை அறிமுகப்படுத்திட தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. இதற்கான நடவடிக்கைகள் முறைப்படி மேற்கொள்ளப்படும்.

செய்தியாளர் :– இந்த நடைமுறை தமிழில் மட்டும்தான் இருக்குமா ? அல்லது ஆங்கிலத்திலும் தொடருமா ?

முதலமைச்சர் கலைஞர் :– ஆங்கிலம் மாத்திரம் தெரிந்தவர்கள் ஆங்கிலம் மட்டும்தான் பயன்படுத்த முடியும். அவர்களுக்கு விதிவிலக்குதான்.

செய்தியாளர் :— சட்டப் புத்தகங்கள் தமிழாக்கம் செய்யப்படுமா ?

முதலமைச்சர் கலைஞர் :— அதற்கு என்னென்ன செய்ய முடியுமோ அதற்கான ஏற்பாடுகளை செய்வோம்.

செய்தியாளர் :— இதனால் நீதிமன்ற நடவடிக்கைகள் கால தாமதம் ஆகாதா ?

முதலமைச்சர் கலைஞர் :— இதனைக் கொண்டு வராமல் இருந்த போதே எவ்வளவோ காலம் தாழ்த்தினார்களே! (சிரிப்பு). மொழிபெயர்ப்பு வேண்டும்; இந்தியில் வேண்டும்; மலையாளத்தில் வேண்டும்; ஆங்கிலத்தில் வேண்டும் என்று சொல்லி காலம் தாழ்த்தினார்களே! காலம் தாழ்த்தவா அவர்களுக்குத் தெரியாது ?

செய்தியாளர் :— முல்லைப் பெரியார் அணை விஷயத்தில் தண்ணீர் மட்ட அளவை உயர்த்துவது குறித்து பேசக்கூடாது என்று கேரளா முதலமைச்சர் தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முடிவெடுத்திருக்கிறார்களே ? இந்த நிலையில் டெல்லி செல்லும் தாங்கள் என்ன பேச இருக்கிறீர்கள் ?

முதலமைச்சர் கலைஞர் :— நாங்கள் உச்சநீதி மன்றத்தினுடைய கருத்தை மதித்து நடந்து கொள்வதற்காக டெல்லிக்கு பேச்சு வார்த்தைக்கு செல்கிறோம். வேறு எதையும் இப்போது யூகித்துச் சொல்ல இயலாது.

செய்தியாளர் :— வேறு புதிய அணை கட்ட வேண்டுமென்று கேரள முதலமைச்சர் கூறி இதன்மூலம் இப்பிரச்சினையை மேலும் மேலும் காலம் தாழ்த்துவதற்கான தந்திரம் என்று கருதுகிறீர்களா ?

முதலமைச்சர் கலைஞர் :— பேச்சுவார்த்தைக்கு போகும் பொழுது இந்த மாதிரியான பிரச்சினைகளை எல்லாம் எழுப்புவதும், பிரச்சினையை பூதாகாரப் படுத்துவதும் நாகரிகமாகாது.

**செய்தியாளர் :– காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் கூட்டினார்கள். அதில் சட்ட மன்ற காங்கிரஸ் எதிர்க்கட்சித் தலைவர் திரு.சுதர்சனம் அவர்கள் பேசும்பொழுது நாங்கள் ஒன்றும் சாமியார் மடம் நடத்தவில்லை; நூற்றாண்டு கண்ட கட்சி இது; எங்களுக்கும் மந்திரி சபையில் இடம்பெற வேண்டும் என்ற ஆசை உண்டு என்று கூறியிருக்கிறார்களே ?**

**முதலமைச்சர் கலைஞர் :– பேச்சுரிமைக்கு நான் மதிப்பளிப்பவன்.**

**செய்தியாளர் :– ராஜபக்சே சென்னை வரும்போது பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் திரு.இராமதாசு அவர்கள் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்துள்ளார்களே . . . .**

**முதலமைச்சர் கலைஞர் :– ஒவ்வொரு கட்சியும் தங்களுக்குள்ள தமிழின உணர்வை அவர்களுடைய முறையிலே வெளிப்படுத்துகிறார்கள் என்றால், அது மொத்த தமிழகத்தின் உணர்வு என்பதை சம்மந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.**

**செய்தியாளர் :– ராஜபக்சே வரும்போது அவரிடம் மத்திய அரசு என்ன கருத்தை வலியுறுத்த வேண்டுமென்று நீங்கள் தமிழகத்தின் சார்பில் பிரதமரிடம் ஏதாவது கூறியிருக்கிறீர்களா ?**

**முதலமைச்சர் கலைஞர் :– இலங்கையில் அமைதி ஏற்படவும், ஈழத் தமிழர்கள் இப்பொழுது நடைபெறுவதுபோல படுகொலைக்கு உள்ளாகாமல் இருக்கவும் என்ன வழிகள் உண்டோ அந்த வழியை இலங்கை அரசு தேர்ந்தெடுத்து கடைப்பிடிக்க வேண்டுமேயல்லாமல் வேறு எந்த வழியிலும் ஈழத் தமிழர்களை இலங்கை அரசு அடக்கி ஒடுக்க நினைக்கக் கூடாது.**

**செய்தியாளர் :— ஓமலூர் பள்ளியில் ஒரு மாணவி மர்மமான முறையில் இறந்த விவகாரத்தைத் தொடர்ந்து — ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு ஆலோசகர் நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளதே ?**

**முதலமைச்சர் கலைஞர் :— அது சம்மந்தமாக விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் நேரில் சென்று பார்வையிட்டு விவரங்களை அறிந்திருக்கிறார். சட்டப்படியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.**

**செய்தியாளர் :— பாப்பாபட்டி, கீரிப்பட்டி உள்ளிட்ட நான்கு ஊராட்சி மன்றத் தலைவர்களை அழைத்து பாராட்டினீர்கள். சமீபத்தில் மதுரை மாவட்டத்தில் ஒரு பஞ்சாயத்துத் தலைவர் பதவியை ஏலம் விட்டுள்ளதாக தகவல் வந்துள்ளதே ?**

**முதலமைச்சர் கலைஞர் :— மாவட்ட ஆட்சித் தலைவருடன் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது. இதுபோன்ற நிலைமைகள் எங்கும் துளிர்க்கக்கூட விடாமல் பார்த்துக் கொள்கிற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.**

**செய்தியாளர் :— சென்னையில் சென்ட்ரல் அருகே கொலைச் சம்பவம் ஒன்று அண்மையில் நடைபெற்றுள்ளதே. இதுபோன்ற வன்முறைகளை ஒடுக்க என்கவுண்டர் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா ?**

**முதலமைச்சர் கலைஞர் :— மறுநாளே காவல்துறை அதிகாரிகளின் கூட்டத்தைக் கூட்டி ஆலோசனை நடத்தி தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.**

செய்தியாளர் :– அரசு ஊழியர்களுக்கு சம்பளம் “எலக்ட்ரானிக் கிளியரன்ஸ் சிஸ்டம்”(ECS) மூலம் வழங்கப்படுவதில் குளறுபடிகள் இருப்பதாகக் கூறப்படுகிறதே ?

(நிதித்துறைச் செயலாளர் :– இ.சி.எஸ். முறையில் அவர்களுடைய வங்கிக் கணக்கில் சம்பளம் செலுத்தப்படுகிறது. தவறான வங்கி கணக்கு எண் கொடுத்திருந்தால் தவறான கணக்கில் போய் சேர வாய்ப்புள்ளது. இந்தப் பிரச்சினை அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து வங்கியாளர்களை அழைத்து பேசி அரசு ஊழியர்களுடைய சம்பளம் தாமதமில்லாமல் வழங்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.)

செய்தியாளர் :– இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி குடும்ப அட்டை உள்ள அனைவருக்கும் வழங்கப்படுமா ?

முதலமைச்சர் கலைஞர் :– இன்றுதான் டெண்டர் பிரிக்கிறோம். அதை எப்படி விநியோகிப்பது என்பதை உடனடியாக முடிவு செய்து அறிவிப்போம்.

செய்தியாளர் :– சென்னை விமான நிலைய விரிவாக்கம் பற்றி விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகத்துடன் ஏதேனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதா ?

முதலமைச்சர் கலைஞர்:– வீணான தொல்லைகளும், இடையூறுகளும் யாருக்கும் ஏற்படாத அளவில் விமான நிலையம் விரிவுபடுத்தப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**செய்தியாளர் :— ஈழத் தமிழர்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கும் விஷயத்தில் தான் மேற்கொண்ட முயற்சியை தாங்கள் தட்டிப் பறித்ததாக வைகோ கூறியிருக்கிறாரே . . . . .**

**முதலமைச்சர் கலைஞர் :— . . . . . . . . . . . (செய்தியாளர்கள் சிரிப்பு).**

**செய்தியாளர் :— நிர்வாகத்தைச் சீரமைக்க ஒரு குழு அமைக்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் கூறியிருந்தீர்களே . . . . .**

**முதலமைச்சர் கலைஞர் :— குழு அமைத்தவுடன் கட்டாயம் தெரிவிக்கப்படும்.**

**செய்தியாளர்:— திட்டக்குழு துணைத் தலைவர் நேற்று தங்களைச் சந்தித்து வழங்கிய அணுகுமுறை அறிக்கையில் மாநில அரசே சேவை வரியை வசூலிக்க வேண்டும் என்று ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறதே. . . .**

**முதலமைச்சர் கலைஞர்:— நீண்டகாலமாக திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லிக் கொண்டு வருகின்ற கருத்து இது. அதனை திட்டக்குழு தற்பொழுது வலியுறுத்தியுள்ளது.**

**செய்தியாளர்:— ஹெல்மெட் அணிவது மீண்டும் கட்டாயப்படுத்தப்படுமா ?**

**முதலமைச்சர் கலைஞர்:— யோசிக்கப்படும்.**